DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC No. 623/2021 Crime No. Station:

| Name | PW 1- ஞானபாலன் | Caste | |
|---|---|---|---|
| Father Name | ராமசாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 58 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 07.07.2023 |

**முதல் விசாரணை-**

நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது முதல் விசாரணைக்கான சங்கதிகளை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் சத்திய பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் என்ன கூறியுள்ளது என்று எனக்கு தெரியும். 27.07.2021ம் தேதியிட்ட SBI வங்கி, பவானி கிளை ரூ.2,00,000/-த்திற்கான காசோலை எண்.934737 ன் அசல் **ம.சா.ஆ.1**, 28.07.2021ம் தேதியிட்ட மேற்படி காசோலையை கரூர் வைஸ்யா வங்கி, பவானி கிளையில் வழங்கிய ரிட்டன் மெமொவின் அசல் **ம.சா.ஆ.2**, 31.07.2021ம் தேதியிட்ட புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அஞ்சலக இரசீதுடன் கூடிய அலுவலக நகல் **ம.சா.ஆ.3,** 02.08.2021ம் தேதியிட்ட மேற்படி அறிவிப்பை எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல் **ம.சா.ஆ.4,** 22.08.2021ம் தேதியிட்ட எதிரி தனது வழக்கறிஞர் மூலம் புகார்தாரரின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதிலறிவிப்பின் அசல் **ம.சா.ஆ.5,** 01.04.2021 முதல் 31.03.2022ம் வரையிலான 2022-2023ம் ஆண்டிற்கான புகார்தாரர் தாக்கல் செய்த வருமான வரிக்கணக்கின் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது) **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகாரில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.